**O.S.No. 260/2018**

**PW1 :** சுதா தேதி 27.11.2025

**வாசா 1 சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு, 1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

வெற்றிவேல், குமரேசன் ஆகியோர் என்னுடைய தம்பிகள். என் தந்தை பெயர் லோகநாதன். என் அப்பாவிற்கு நாங்கள் மூவரும் தான் வாரிசுகள். அப்பா இறக்கும் வரை சொத்துகளை அனுபவித்து வந்தார். அவை பூர்வீக சொததுகள். யார் பெயரில் ஆவணங்கள் இருந்தது என்றால் என் அப்பா பெயரில் இருந்தது. அதை நான் தாக்கல் செய்யவில்லை. 2001 ல் எனக்கு திருமணம் ஆனது. எனக்கு 1 பெண் 1 மகன். என்னுடைய பிள்ளைகளுக்கு திருமணம் ஆகவில்லை. என் கணவர் 2020 ல் இறந்துவிட்டார். நாங்கள் அனைவரும் ஒரே குடும்பமாக தான் இருந்தோம். என் கணவருக்கு 2 ஏக்கர் நிலம் இருக்கிறது. பாகப்பிரிவினை கேட்டு வழக்கை தாக்கல் செய்திருக்கிறேன். பாகப்பிரிவினை பத்திரம் எழுதுவதாக சொல்லி அழைத்து சென்று மோசடியாக எழுதி கொண்டார்கள். அந்த பத்திரத்தில் என் கணவர் சாட்சி கையெழுத்திட்டுள்ளார். வேறு யார் சாட்சிக்கு வந்தார்கள் என்றால் வேறு யாரும் வரவில்லை. அந்த தானசெட்டில்மெண்ட் பத்திரத்தை படித்து பார்த்தீர்களா என்றால் பார்க்கவில்லை படிக்க விடவில்லை. நாளது வரை அந்த பத்திரத்தை பார்த்தேனா என்றால் பார்க்கவில்லை. அந்த தானசெட்டில்மெண்ட் பத்திரத்தின் நகல் எடுத்து பார்க்கவில்லை. வழக்கின் தாக்கல் செய்யும் போது என்ன ஆவணம் போட்டேன் என்றால் எந்த ஆவணம் தாக்கல் செய்தேன் என்று எனக்கு தெரியாது. எனக்கு படிப்பறிவு கிடையாது. என் வழக்கறிஞரிடம் கேட்டு தெரிந்து கொள்ளவில்லை. மேற்படி தாவா சொத்து காலியிடமா கட்டிடமா என்பதை தெரிந்து கொண்டேனா என்றால் ஒரு சொத்து காலியிடமாகவும் ஒரு சொத்து கட்டிட வேலை நடந்து

கொண்டும் இருக்கிறது. கட்டிடம் கட்டுபவர் கோயமுத்தூர்காரர். அவர் எதை அடிப்படையாக வைத்து கட்டிடம் கட்டுகிறார் என்பதை தெரிந்து கொண்டேனா என்றால் கட்டிடம் கட்டும் இடத்திற்கு சென்று கேட்ட போது பதில் சொல்லவில்லை. கட்டிடம் கட்டும் நபரை நான் தரப்பினராக சேர்க்கவில்லை. வழக்கு நிலுவையில் இருப்பதை குறித்து அவரிடம் சொன்ன போதும் அதை அவர் கேட்டுகொள்ளவில்லை. தாவா தாக்கல் செய்யும் போது சொத்து விவரம் கொடுத்தேன் அதன் விவரம் தெரியாது. என் தம்பி ஆவணங்களை கொடுக்க மாட்டேன் என்று சொல்லிவிட்டார்.